



# நல்ல இசைக்கு நான் ரசிகை

**மார்கழி மாதத்து மங்கள இசைபோல் இருக்கிறார். நமது பாரம்பரியம் மிக்க சேலையில் அகல் விளக்காய் அழகாய் மின்னுகிறார், கர்நாடக இசைக் கலைஞர் சுதா ரகுநாதன். அவரது சங்கீதத்தை போலவே பேச்சிலும் அசாத்திய தெளிவு சிக்கலான கேள்விகளுக்குக்கூட சிரித்துக்கொண்டே பதில் வருகிறது.**

**சென்னையில் திருவையாறு என்று சொல்கிறார்களே? அது என்ன?**

கர்நாடக இசைக்கலைஞர்கள் இந்த மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு கச்சேரி செய்வார்கள். திருவையாறில் நடக்கும் சங்கீதம் போன்றே சென்னையில் நடைபெறுவதால் இந்நிகழ்ச்சிக்கு திருவையாறு என்று சொல்கிறார்கள். இது தவிர வேறு எந்த காரணமும் இல்லை.

**பல இசைக்கச்சேரியில் பாடிய அனுபவம் பெற்றவர் நீங்கள். உங்கள் மனதை பாதித்த சம்பவங்கள் ஏதேனும் ?**

லட்சம்பரி என்னும் இடத்தில் இண்டர்நேஷனல் மியூஸிக் ஃபெஷ்டிவல் நடந்தது. அந்த ஃபெஷ்டிவலுக்கு இந்தியாவிலிருந்து நான் மட்டுமே போயிருந்தேன். அந்த இசை விழாவை ஒரு சர்ச்சில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த இடத்தில் ஒலிபெருக்கி வசதிகளே இல்லை என்பதுதான். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. காரணம் மைக்கில் பாடுகின்ற பொழுதுதான் எல்லோருக்கும் சரியாக கேட்கும். நாங்கள் கேட்டுக் கொண்டவுடன் எனக்கு மட்டும் ஒரு மைக்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

நான் கண்களை மூடிக்கொண்டு சங்கீதத்தை பாடிக்கொண்டிருந்த பொழுது திடீரென்று கரண்ட் கட். பாடுவதை நிறுத்தாமல் கண்களை மூடிக்கொண்டு பாடி முடித்து கண்களை திறந்து பார்த்தால் அனைவரின் கையிலும் ஒரு மெழுகுவர்த்தி. கார்த்திகை தீபத்திற்கு ஏற்றிய அகல்விளக்கு ஒளிபோல் அழகாய் இருந்தது. ஒரு நிமிடம் எனது மனம் அந்த ஆனந்தத்தில் மனம் லயித்து போனது. சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் கரண்ட் வந்தது. இந்த சம்பவம் வாழ்நாளில் எப்பொழுதும் மறக்க முடியாது.

**இன்று உங்களை போன்ற பிரபலங்கள் கச்சேரிக்கு பெரிய தொகை கேட்கிறீர்கள். பணம் படைத்தவர்கள் மட்டுமே உங்களை அழைத்து கச்சேரி நடத்த முடிகிறதே? உண்மையா?**

இந்த கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு சில சபா கச்சேரி என்றால் ஐந்தாயிரம்,



**திருவையாறில் நடக்கும் சங்கீதம் போன்றே சென்னையில் நடைபெறுவதால் இந்நிகழ்ச்சிக்கு திருவையாறு என்று சொல்கிறார்கள்.**



ஆராயிரம் ரூபாய் மட்டும் தான் தருவார்கள். இந்த தொகை எங்களை போன்ற அனுபவம் வாய்ந்தவர்களுக்கே அவ்வளவுதான். இதுதான் உண்மை.

30 கச்சேரிகளில் நான் பாடுகிறேன் என்றால் கிட்டத்தட்ட 10 கச்சேரிகளுக்கு காசு வாங்குவதேஇல்லை.

மற்றபடி நீங்கள் நினைப்பது போல் இல்லை. தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் அப்படி தெரியலாம். உண்மை இது தான். இது எனக்கு மட்டுமல்ல. என்னை போன்ற எல்லா இசை கலைஞர்களுக்கும்தான்.

**இப்பொழுதெல்லாம் இசை ஓரளவிற்கு தெரிந்திருந்தால் போதும் மேடை ஏறிவிடலாம் என்று நினைத்துக் கொண்டு கச்சேரியையும் நடத்தி விடுகிறார்கள். விளைவு சங்கீதத்தின் தரம் குறைந்ததுதான் மிச்சம். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?**

இதற்கு விடை நீங்கள் கேட்ட கேள்வியிலேயே இருக்கிறது. இசையை ஓரளவிற்கு கற்றுக் கொண்டுவிட்டால் மேடை ஏறி கச்சேரியும் நடத்தி விடுகிறார்கள். இதனால் சங்கீதத்தின் தரம் குறைந்து போவதுதான் மிச்சம்.

**சிலர் காசு கொடுத்து விருதுகளை வாங்கிக் கொள்வதாக சொல்கிறார்களே?**

இதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் இப்படி செய்பவர்கள் இசை துறையில் நீண்டநாள் பிரகாசிக்க முடியாது. இது என் தனிப்பட்ட கருத்து.

**சங்கீத உலகில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்களில் நீங்களும் ஒருவர். அடுத்து எதை நோக்கி உங்கள் பயணம்?**

"சமுதாய ஃபவுண்டேஷன்" என்கிற அமைப்பின் மூலம் நிறைய ஏழை குழந்தைகளுக்கு உதவிகள் செய்கிறோம். அதுமட்டுமில்லாமல் வசதியற்ற நல்ல திறமையுள்ள கலைஞர்களுக்கு உதவுகிறோம். என்னுடைய ஆசை, விருப்பம், உத்வேகம் எல்லாம் கர்நாடக சங்கீதம் போக முடியாத இடத்திற்கெல்லாம் சங்கீதம் போக வேண்டும். நான் செல்லும் பாதை இதுதான்.

**விமர்சனங்கள் வந்தால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? உங்களுக்குப் பிடித்த இசை விமர்சகர் யார்?**

நல்ல விமர்சனம் வந்தால் அதன்படி சரிசெய்து கொள்வேன். என்னை திருத்திக் கொள்ளும் விமர்சனங்களாக இருக்குமேயானால் அதனை வரவேற்பேன். எனக்கு பிடித்த விமர்சகர் சுப்புடு சார்தான். இசை உலகிற்குக் கிடைத்த பொக்கிஷம் ஆவார். எதையும் வெளிப்படையாக விமர்சனம் செய்யும் குணம் கொண்டவர். அவரை பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

**இசை துறைக்கு வராமல் இருந்திருந்தால், எந்தத் துறைக்கு வந்திருப்பீர்கள்?**

இசை துறையை தேர்தெடுக்காமல் இருந்திருந்தால் பி.ஏ.எக்னாமிக்ஸ் முடித்த கையோடு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.எப்.எஸ்.அதிகாரியாக இருந்திருப்பேன்.

**உங்களுக்கு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். நீங்கள் யாருடைய ரசிகை?**

இசையை தனது மூச்சாக நினைத்து அறுபது வருஷங்கள் பாடிய எம்.எஸ்.அம்மா, நாற்பது ஆண்டுகளாக பாடிவந்த எம்.எல்.வி.அம்மா, இதே போன்று டி.கே.பட்டம்மாள் இவர்கள் அனைவரும் ரசிகர்கள் எதிர்பார்ப்பையும் தாண்டி பிரமிக்க வைத்தவர்கள்.

என்னை பொறுத்தவரை எல்லா பாடகர்களிடமும் ஒரு தனித்திறமை இருக்கிறது. நல்ல இசை எங்கிருந்தாலும் யார் பாடினாலும் அவர்களுக்கு நான் ரசிகை.

• வான்மதி • வசந்தராஜ்

**இசையை தனது மூச்சாக நினைத்து அறுபது வருஷங்கள் பாடிய எம்.எஸ்.அம்மா, நாற்பது ஆண்டுகளாக பாடிவந்த எம்.எல்.வி.அம்மா, இதே போன்று டி.கே.பட்டம்மாள் இவர்கள் அனைவரும் ரசிகர்கள் எதிர்பார்ப்பையும் தாண்டி பிரமிக்க வைத்தவர்கள்.**


**விளம்பர பிரதிநிதிகள் தேவை**

சொர்ணமுகி மாத இதழின் விளம்பர பிரிவிற்கு ஆர்வமும், நுட்பமும் உள்ள விளம்பர பிரதிநிதிகள் தேவை. நல்ல சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள :

**சொர்ணமுகி** மாத இதழ்
129, பெரியார் பாதை, சூளை மேடு, சென்னை-94.
தொலைபேசி : 23612554 / 53
மொபைல் : 98401 73621, 97909 05377